தொலைவை? வகுப்பு மாணவர்களுடன் கலந்துரையாடி இக்கேள்விக்கான விடையைக் கண்டறியவும். கண்டறிந்த விடையை ஆசிரியரிடம் சரிபார்க்கவும்.

## மதிப்பீடு:

*I சரியான விடையைத் தேர்ந்தெடு*

1. ஒரு மரத்தின் சுற்றளவை அளவிடப் பயன்படுவது
   - அ) மீட்டர் அளவு கோல்
   - ஆ) மீட்டர் கம்பி
   - இ) பிளாஸ்டிக் அளவுகோல்
   - ஈ) அளவு நாடா
2. 7மீ என்பது செ.மீ –ல்
   - அ) 70 செ.மீ
   - ஆ) 7 செ.மீ
   - இ) 700 செ.மீ
   - ஈ) 7000 செ.மீ
3. ஒரு அளவை அளவிடும் முறைக்கு ________ என்று பெயர்
   - அ) இயல் அளவீடு
   - ஆ) அளவீடு
   - இ) அலகு
   - ஈ) இயக்கம்
4. சரியானதைத் தேர்ந்தெடு
   - அ) கி.மீ > மி.மீ > செ.மீ > மீ
   - ஆ) கி.மீ > மி.மீ > செ.மீ > கி.மீ
   - இ) கி.மீ > மீ > செ.மீ > மி.மீ
   - ஈ) கி.மீ > செ.மீ > மீ > மி.மீ
5. அளவுகோலைப் பயன்படுத்தி, நீளத்தை அளவிடும்போது, உனது கண்ணின் நிலை ____________ இருக்க வேண்டும்.
   - அ) அளவிடும் புள்ளிக்கு இடதுபுறமாக
   - ஆ) அளவிடும் புள்ளிக்கு மேலே, செங்குத்தாக
   - இ) புள்ளிக்கு வலது புறமாக
   - ஈ) வசதியான ஏதாவது ஒரு கோணத்தில்

*II சரியா தவறா என எழுதுக*

1. நிறையை 126 கிகி எனக் கூறுவது சரியே.
2. ஒருவரின் மார்பளவை அளவுகோல் பயன்படுத்தி அளவிட முடியும்.
3. 10 மி.மீ என்பது 1 செ.மீ ஆகும்.
4. முழம் என்பது நீளத்தை அளவிடும் நம்பத் தகுந்த முறையாகும்.
5. SI அலகு முறை என்பது உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு அலகு முறையாகும்.

LIVEWORKSHEETS

## III கோடிட்ட இடத்தை நிரப்புக.

1. SI அலகு முறையில் நீளத்தின் அலகு _______________
2. 500 கிராம் = _______________ கிலோகிராம்.
3. டெல்லிக்கும், சென்னைக்கும் இடையில் உள்ள தொலைவு _______________ என்ற அலகால் அளக்கப்படுகிறது.
4. 1 மீ = _______________ செ.மீ என அளவிடப்படுகிறது.
5. 5 கி.மீ =_______________ மீ.

## IV ஒப்புமை தருக

1. சர்க்கரை : பொதுத்தராசு; எலுமிச்சை சாறு: _______________?
2. மனிதனின் உயரம் : செ.மீ ; கூர்மையான பென்சிலின் முனையின் நீளம் _______________?
3. பால்: பருமன் ; காய்கறிகள் : _______________?

## V. பொருத்துக.

| நிரல் "அ" | நிரல் "ஆ" |
|---|---|
| 1. முன்கையின் நீளம் | மீட்டர் |
| 2. நீளத்தின் SI அலகு | விநாடி |
| 3. நானோ | $10^3$ |
| 4. காலத்தின் SI அலகு | $10^{-9}$ |
| 5. கிலோ | முழம் |

## VI. அட்டவணையை நிரப்புக.

| | |
|---|---|
| கன அளவு | _______________ |
| _______________ | கிலோகிராம் |
| சுண்டு விரலின் நீளம் | _______________ |
| _______________ | கி.மீ |

LIVEWORKSHEETS